# DEPOSITION OF WITNESS
## (CHAPTER XXIII CODE OF CRIMINAL PROCEDURE )
**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், வால்பாறை.**
**CC.No.50/2022**

**2025-ம் ஆண்டு செப்டம்பர் திங்கள் 03- ம் நாள் புதன்கிழமை குற்றம் முறையிடுபவரின் அ.சா.10 -வது நபரின் வாக்குமூலம் (1969 ஆம் ஆண்டு 54-வது விதியின் ஏற்பாட்டின்படி) திருமதி.லட்சுமி இளநிலை உதவியாளர் நிறைவேற்றுபவர் அவர்களால் உறுதிமொழி செய்யப்படுகிறது.**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| அ.சா. | - | 10 | தொழில் | - | உதவி ஆய்வாளர் |
| பெயர் | - | திரு.ரதீஸ்குமார் | வட்டம் | - | கோவை |
| த/பெ | - | ஜான்சினியன்சிங் | சமயம் | - | |
| கிராமம் | - | அறிவுசார் சொத்துரிமை அமலாக்கப்பிரிவு | வயது | - | 35/2025 |
| சாதி | - | | | | |

**03-09-2025**

**( 1, 2 எதிரிகள் ஆஜர்)**

**முதல் விசாரணை:**

நான் தற்போது கோயம்புத்தூர் அறிவுசார் சொத்துரிமை அமலாக்கப்பிரிவில் உதவி ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 04-04-2021-ம் தேதி வால்பாறை காவல் நிலையத்தில் உதவி ஆய்வாளராக பணியில் இருந்தபோது காலை 07.00 மணிக்கு பொள்ளாச்சி அரசு மருத்துவமனையிலிருந்து கிடைக்கப்பெற்ற தகவலை பெற்று மருத்துவமனை சென்று காலை 09.00 மணிக்கு சிகிச்சையில் இருந்த கோகிலா வயது 36/2021, க/பெ. சக்திவேல், 16/139 மாணிக்கா என்.சி, வால்பாறை என்பவரை விசாரணை செய்து புகார் வாக்குமூலம் பதிவு செய்து நிலையம் வந்து காலை 11.00 மணிக்கு வால்பாறை காவல் நிலைய குற்ற எண். 57/2021, ச/பி. 294(b), 323, 324, 506(ii)இதச, உ/இ பிரிவு 4 TNPWH Act-ன் கீழ் வழக்கு பதிவு செய்தேன். **(அந்த முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ.7 ஆக குறியீடு செய்யப்படுகிறது)** பின்னர் அன்றைய தினமே மதியம் 12.00 மணிக்கு சம்பவயிடமான மாணிக்கா என்சி புகார்தாரரின் வீட்டின் முன்பு சாட்சிகள் அறிவழகன் மற்றும் ஞானசேகர் ஆகியோர் முன்னிலையில் சம்பவயிடத்தை பார்வையிட்டு பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்தேன். **(அந்த மாதிரி வரைபடம் அ.சா.ஆ.8 ஆக குறியீடு செயப்படுகிறது)** பின்னர் சம்பவயிடத்திலிருந்து சுமார் மதியம் 13.15 மணிக்கு அதே சாட்சிகள் முன்னிலையில் சுமார் 70 செ.மீ நீளமுள்ள 12.5 செ.மீ விட்டம் கொண்ட இருபுறமும் உடைந்த நிலையில் உள்ள மரக்கட்டையையும் சுமார் 1 கிலோ எடைகொண்ட கையளவு கருங்கல் ஒன்றையும் மகஜரில் கைப்பற்றினேன். பின்னர் சாட்சிகள் கோகிலா, அனுசியா, தீபிகா, முருகன், செல்வி, ஆகாஸ், அறிவழகன், ஞானசேகர் ஆகியோரை தனித்தனியே விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்தேன். சாட்சிகளின் வாக்குமூலத்தின் அடிப்படையிலும் எனது புலன் விசாரணையின் அடிப்படையிலும் சம்பவம் உண்மை என தெரியவரவே எதிரிகளை தேடிச்சென்ற நிலையில் அன்றைய தினமே 16.00 மணிக்கு 1-ம் எதிரி நிஷா க/பெ. சுரேஷ்குமார் என்பவரை மோணிக்கா பஸ்ஸ்டாப் அருகில் நின்றுகொண்டிருந்தவ **CASE PENDING**
ரை காரணம் கூறி என்னுடன் வந்த முதல்நிலை பெண் காவலர் 723 திருமதி.ரேவதி அவர்கள் கைதுசெய்து எதிரியை நிலையம் அழைத்துவந்தோம். பின்னர் எதிரியை தக்க வழிக்காவலுடன் நீதிமன்ற காவலுக்கு அனுப்பிவைத்தேன். தடய பொருட்களை படிவம் 91-ன் மூலம் நீதிமன்றத்திற்கு அனுப்பிவைத்தேன். **(அந்த படிவம் 91 அ.சா.ஆ.9 ஆக குறியீடு செய்யப்படுகிறது P.R.No.**

**55/2022 தடய பொருளான கருங்கல் அ.பொ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது)** பின்னர் 04-06-2021-ம் தேதி அ.சா.1-க்கு சிகிச்சையளித்த மருத்துவர் நவரத்தினராஜன் என்பவரை விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்து விபத்து பதிவேடு மற்றும் காயச்சான்று பெற்றேன். மருத்துவர் காயச்சான்று சாதாரண காயம் என சான்று வழங்கியுள்ளார். பின்னர் பணியிட மாறுதலின் காரணமாக வழக்கு கோப்பினை மேல் விசாரணைக்காக நிலைய காவல் உதவி ஆய்வாளர் திரு.சவரிமுத்து அவர்களிடம் ஒப்படைத்தேன்.

**<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை:</u>**

புகார்தாரரான அ.சா.1 முதன் முதலில் வால்பாறை அரசு மருத்துவமனையில் தான் சிகிச்சைக்கு சேர்ந்துள்ளார் என்றால் சரிதான். வால்பாறை அரசு மருத்துவமனையில் இருந்து காவல் நிலையத்திற்கு தகவல் எதுவும் கிடைக்கவில்லை என்றால் சரிதான். புகார் வாக்குமூலத்தை நான் கைப்பட எழுதினேனா என்றால் இல்லை என்னுடன் வந்த போலீசார் எழுதினார். சுமார் எவ்வளவு நேரம் புகார் வாக்குமூலம் பெறப்பட்டு எழுதப்பட்டது என்றால் சுமார் 30 நிமிடங்கள் ஆகியிருக்கும். புகார் வாக்குமூலத்திலும், முதல் தகவல் அறிக்கையின் மூன்றாவது பக்கத்தில் The above statement was recorded by me in Pollachi GH on 04-04-2021 என உள்ளது என்றால் சரிதான். புகார் வாக்குமூலத்தை பெற்று பதிவு செய்ததாக சொல்லப்படும் போலீசாரை இந்த வழக்கின் சாட்சியாக விசாரித்து வாக்குமூலம் பெறவில்லை என்றால் சரிதான். பொள்ளாச்சியிலிருந்து வால்பாறை வருவதற்கு 2 மணி நேரம் ஆகும் என்றால் காரில் வந்தால் 1 1/2 மணி நேரத்தில் வந்துவிடலாம். நான் சொன்னது போல சொன்ன நேரத்தில் சொன்ன விதத்தில் வாக்குமூலம் பதிவு செய்யவில்லை என்றால் சரியல்ல. எனது விசாரணையில் அ.சா.1 சம்பவத்தின் போது வெளியில் சத்தம் கேட்டது, கதவு, லைட் எல்லாம் அடித்து உடைத்துவிட்டார்கள் என்று சொல்லியுள்ளாரா என்றால் இல்லை. தர்சன் என்பவர் பாத்ரூம்பில் ஒழிந்து இருந்ததாகவும் அதை ஆஜர் எதிரிகளிடம் கேட்டுக்கொண்டிருந்தபோது தர்சன் அ.சா.1னை உருட்டுக்கட்டையால் பின்மண்டையில் அடித்தாகவும், திரும்பி பார்த்தபோது முன்நெற்றியில் அடித்தாகவும் அ.சா.1 சொல்லியுள்ளாரா என்றால் இல்லை. மேலும் அ.சா.1 எனது விசாரணையில் நான் கீழே விழுந்துவிட்டேன். ஆஜர் முதலாவது எதிரி கல்லை எடுத்து எனது தொடையில் போட்டுவிட்டார் அதனால் எனக்கு ரத்தக்கட்டு ஏற்பட்டது என்று சொல்லியுள்ளாரா என்றால் இல்லை. ராஜம்மாள் என்னை கட்டை எடுத்து உடம்பு முழுதும் அடித்துக்கொண்டே இருந்தார் என்றுசொல்லியுள்ளாரா என்றால் இல்லை. எனது அக்கா மகள் அனுசியாவையும், தீபிகாவையும் அடித்துவிட்டார்கள் என்று சொல்லியுள்ளாரா என்றால் இல்லை. அ.சா.1 கீழே கிடந்தபோது 1-ம் எதிரி நிஷா தாலியோடு இரண்டு பவுன் செயினை அறுத்துசென்றுவிட்டார் என்று அ.சா.1 எனது விசாரணையில் சொல்லியுள்ளரா என்றால் இல்லை. அதே போல தர்சன் என் முடியை பிடித்து கல்லிலேயே முட்டினார்என்று அ.சா.1 எனது விசாரணையில் சொல்லியுள்ளரா என்றால் இல்லை. அந்த சமயத்தில் தர்சன் கஞ்சாவும், தண்ணீயும் அடித்துஇருந்தார் என்று அ.சா.1 எனது விசாரணையில் சொல்லியுள்ளரா என்றால் இல்லை. தர்சன் கட்டையை எடுத்து ஓடிவிட்டார் என்று அ.சா.1 எனது விசாரணையில் சொல்லியுள்ளரா என்றால் இல்லை. ஏற்கனவே மூன்று முறை வால்பாறைகாவல் நிலையத்தில் எதிரிகளுக்கு எதிராக புகார் கொடுக்கப்பட்டு அதில் மனுஏற்பு ரசீது கொடுத்து எதிரிகளை எச்சரித்து அனுப்பியதாக அ.சா.1 எனது விசாரணையில் சொல்லியுள்ளரா என்றால் இல்லை. அ.சா.2 எனது விசாரணையில் தர்சன் என்று நினைக்கிறேன் எனது சித்தியை கட்டையால்

மண்டையை உடைத்துவிட்டார்என்று சொல்லியுள்ளாரா என்றால் இல்லை. அ.சா.2 எனது விசாரணையில் நிஷா எனது சித்தியை துவைக்கிற கல்லில் போட்டு மிதித்ததாக சொல்லியுள்ளாரா என்றால் இல்லை. அ.சா.2, 2-வது எதிரி தன்னை கட்டையால் அடித்ததாக சொல்லியுள்ளாரா என்றால் இல்லை. அ.சா.3 எனது விசாரணையில் சத்தம் கேட்டு லைட் போட்டு பார்ப்பதற்கு முன்பாகவே எதிரிகள் லைட், கதவு அனைத்தையும் உடைத்துவிட்டார்கள் என்று சொல்லியுள்ளாரா என்றால் இல்லை. அ.சா.3 எனது விசாரணையில் அ.சா.1 மயக்கம்போட்டு விழுந்தபின்பு அந்த பாட்டி கல்லை எடுத்து அ.சா.1 னை அடித்ததாக சொல்லியுள்ளாரா என்றால் இல்லை. அ.சா.1 னை தர்சன் கட்டையால் அடித்தாக அ.சா.3 சொல்லியுள்ளாரா என்றால் இல்லை. அ.சா.3 எனது விசாரணையில் எனது அம்மாவின் முடியை பிடித்து பேக்சைடில் உள்ள பாறையில் தலைமுடியை சுற்றிபிடித்து பாறையில் இடித்தார் அதில் எனது அம்மாவிற்கு மண்டை எல்லாம் உடைந்துவிட்டது என்று சொல்லியுள்ளாரா என்றால் இல்லை. அ.சா.3 எனது விசாரணையில் 2 பவுன் செயினை பறித்து சென்றதாக சொல்லியுள்ளாரா என்றால் இல்லை. மாதிரி வரைபடத்தில் வாதியின் வீட்டை ஒட்டி சந்திரசேகர், ஆறுமுகம், சுப்பு என்பவர்களின் வீடு இருப்பதாக காட்டப்பட்டுள்ளது என்றால் சரிதான். அவர்களை இவ்வழக்கில் சாட்சிகளாக விசாரிக்கவில்லை என்றால் நான் விசாரணைக்கு போனபோது அவர்கள் அங்கு இல்லை. இவ்வழக்கில் சாட்சிகளாக முன்னிடப்பட்டுள்ள செல்வி, முருகன், ஆகாஷ் ஆகியோர்கள் சம்பவயிடத்தில் குடியிருப்பதாக வரைபடத்தில் குறிப்பிடவில்லை என்றால் சரிதான். நான் பொள்ளாச்சி அரசு மருத்துவமனையில் அ.சா.1 னிடம் புகார் வாக்குமூலம் பெறும்போது அ.சா.2 அனுசியாவும், அ.சா.3 தீபிகாவும் அ.சா.1 னுடன் இருந்தார்களா என்றால் அனுசியா இருந்தார். அனுசியா என்பவர் அ.சா.1 னின் அக்கா மகள் என்றால் சரிதான். அ.சா.3 தீபிகா அ.சா.1 னின் மகள் என்றால் சரிதான். அ.சா.1 அம்மா என்பதால் அ.சா.3 மருத்துவமனையில் உடன் இருந்ததாக சொல்லியுள்ளார் என்றால் எனது விசாரணையில் சொல்லியுள்ளார். சம்பவ சாட்சிகளான அ.சா1 முதல் அ.சா.3 வரையிலானவர்கள் பொள்ளாச்சி மருத்துவமனையில் இருந்த நிலையில் சம்பவயிடத்தை யார் எனக்கு அடையாளம் காட்டியது என்றால் அனுசியாவின் அப்பா அறிவழகன் அடையாளம் காட்டினார். அறிவழகன் சம்பவ சாட்சி அல்ல என்றால் சரிதான். சம்பவயிடத்தில் அவர் குடியில்லை என்றாலும் சரிதான். மகஜர் சாட்சிகள் 2 பேரும் அந்த சம்பவயிடத்தில் குடியில்லை என்றால் சரிதான். சம்பவயிடத்தில் கல் மற்றும் கட்டை கிடந்ததாக பார்வை மகஜரிலும், வரைபடத்திலும் குறிப்பிடவில்லை என்றால் சரிதான். சம்பவயிடம் சாலையை ஒட்டி இல்லை என்றால் சரிதான். சாலையிலிருந்து சற்று தூரம் படிக்கட்டு ஏறிசெல்லவேண்டும் என்றால் சரிதான். சம்பவயிடத்தில் அடுப்பு எறிப்பதற்காக கட்டைகளும், தடுப்பு சுவர்கள் இடிந்த கற்களும் கிடந்தது எனறால் இல்லை. கைப்பற்றிய கல்லையையும், கட்டையையும் யார் அடையாளம் காட்டியது என்றால் அறிவழகன் அடையாளம் காட்டினார். அறிவழகன் சம்பவத்தை நேரடியாக பார்க்கவில்லை என்றாலும் சம்பவ இடத்தில் அவர் குடியும் இல்லை என்றாலும் சரிதான். வழக்கு சொத்தான அ.சா.பொ.2 கல்லில் ரத்தக்கரை இருந்ததாக கைப்பற்றுதல் மகஜரில் குறிப்பிடவில்லை என்றால் சரிதான். நீதிமன்றத்தில் ஆஜர் செய்துள்ள அ.சா.பொ.1 கல்லு ஒரு கிலோ எடை உள்ளது அல்ல என்றால் சுமார் 1 கிலோ எடையுள்ளது என்று குறிப்பிடப்பட்டுள்ளது. அ.சா.ஆ.5 விபத்து பதிவேட்டிலும், அ.சா.ஆ.6 காயச்சான்றிலும் ஒரு நபர் தாக்கியதாக குறிப்பிடப்பட்டுள்ள நிலையில் எதன் அடிப்படையில் அ.சா.9 மருத்துவர் மூன்று நபர்கள் தாக்கியதாக என்னிடம் வாக்குமூலம் கொடுத்துள்ளார் என்பது தொடர்பாக நான் விசாரித்தேனா என்றால் இல்லை. 1-ம் எதிரியின் கணவருக்கும், அ.சா.1 க்கும் நீண்ட நாட்களாக திருமணம் கடந்த உறவு இருப்பதை

எதிரிகள் கண்டித்ததால் எதிரிகளை பழிவாங்கும் நோக்கில் வேறு வகையில் ஏற்பட்ட காயத்தை வைத்து எதிரிகளுக்கு எதிராக அ.சா.1 புகார் கொடுத்துள்ளார் என்றாலும் அதனை நான் சரிவர விசாரிக்காமல் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்துள்ளேன் என்றாலும் சரியல்ல. புகாரில் சொல்லியுள்ளவாறு சம்பவமே நடக்கவில்லை என்பதால் தான் சம்பவயிடத்திற்கு அருகில் உள்ள நபர்களை இவ்வழக்கில் சாட்சியாக விசாரிக்கவில்லை என்றால் சரியல்ல. எதிரிகளுக்கும் வழக்கு சம்பவத்திற்கும் சம்பந்தம் அல்ல என்றால் சரியல்ல.

**மறு விசாரணை** :இல்லை

Taken down by/before me in open Court, read over/interpreted to the witness in the presence of the accused/Accused's pleader and admitted by the witness to be correct.

(ஒப்பம்) திருமதி. N.மீனாட்சி,
மாவட்ட உரிமையியல் மற்றும்
நீதித்துறை நடுவர், வால்பாறை.